OS No.38/2017, நாள்: 24.01.2020

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் உதவியாளர் திருமதி.சரஸ்வதி அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பொன்னுசாமி | வயது | : 36 |
| தந்தை பெயர் | : பெருமாள் | வேலை | : விவசாயம் |
| கிராமம் | : கொங்கரப்பட்டி | நாட்டினம் | : இந்து |
| தாலுக்கா | : காரிமங்கலம் | சாதி | : -- |

<u>பி.வா.சா.2 ___ பொன்னுசாமி ஆஜர், குறுக்கு விசாரணை :-</u>

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 5ம் வகுப்பு படித்துள்ளேன். நான் தொழில் செய்துவருகிறேன் என்றால் விவசாயம் செய்துவருகிறேன். வாதி பிரதிவாதிகளை தெரியும் என்று கூறியிருக்கும் நிலையில் அவர்கள் எனக்கு உறவினர்களா என்றால் உறவினர்கள் அல்ல, போகவர பழக்கம். இவ்வழக்கில் யார் யாருக்கு எதிராக எந்த சொத்திற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால் பெயர் தெரியாது ஆனால் அந்த நபரை தெரியும். அவர்களுடைய தகப்பனார் பெயர், அவருக்கு என்ன தொழில், எந்த ஊர் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதியின் தந்தை யார், அவருடைய சொத்து எங்கு உள்ளது என்று எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். நான் பத்திரத்தில் சாட்சி கையொப்பம் போட்டதாக கூறியிருக்கும் நிலையில் அவ்வாறு எத்தனை பத்திரங்களில் சாட்சி கையொப்பம் போட்டேன் என்றால் 2-3போட்டுள்ளேன். நான் 2012ம் ஆண்டு எந்த தேதியில் கையொப்பமிட்டேன் என்று தெரியுமா என்றால் தெரியாது.

அந்த தேதியில் வேறு ஏதாவது கையொப்பமிட்டேனா என்றால் என்னுடைய சொந்த பத்திரத்தில் கையொப்பமிட்டேன். நான் சொத்து வாங்கிய பத்திரத்தில் கையொப்பமிட்டேன். என்னுடைய பத்திரத்தை பதிவு செய்யத்தான் அங்கு வந்தேன் என்றால் சரிதான். நான் சாட்சி கையொப்பமிட மட்டும்தான் என்னை அழைத்தார்கள் என்றும் பத்திரத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் எனக்கு தெரியும் 16 செண்ட் நிலத்தை வாதி விற்பதாகவும், பிரதிவாதி வாங்குவதாகவும் சொன்னார்கள். எங்கு வைத்து அதை சொன்னார்கள் என்றால் அவர்கள் வீட்டில் வைத்து சொன்னார்கள். எந்த தேதியில் சொன்னார்கள் பத்திரம் செய்வதற்கு ஒரு 20-30 நாட்களுக்கு முன்பு சொன்னார்கள். அன்று யார்யார் இருந்தார்கள் என்றால் நிறையபேர் இருந்தார்கள் எவ்வளவு பேர் என்று தெரியாது. அன்று எதாவது ஆவணங்கள் ஏதாவது எழுதப்பட்டதா என்றால் பின்னிட்டு எழுதிக்கொள்ளலாம் என்று சொன்னார்கள் எழுதினார்கள் என்று தெரியாது. அந்த பத்திரத்தை யார் எந்த தேதியில் எழுதினார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. சாட்சி கையொப்பமிட்டது எத்தனை பேர் என்றால் நாங்கள் இருவர் போட்டோம் மற்றொருவர் யார் என்று தெரியுமா என்றால் அவர் இறந்துவிட்டார். இறந்தவர் எங்கள் ஊரைச்சேர்ந்தவரா என்றால் எங்கள் ஊர்தான். என்னுடைய பத்திரத்தை செய்வதற்குதான் அவரை நான் அழைத்து வந்தேன் என்றால் சரிதான். நான் கையொப்பமிட்டதுடன் வேறு எதுவும் எனக்கு தெரியாது என்றால் அது 16 செண்ட் நிலமும், வீடும், தென்னை மரங்களும் எழுதப்பட்டிருந்தது வேறு எதுவும் தெரியாது. சார்பதிவாளர் அலுவலத்தில் வைத்து கையொப்பமிட்டேனா என்றால் அங்குதான் கையொப்பமிட்டேன். அதற்கு முன்பு எப்போது அந்த ஆவணத்தை பார்த்தில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் வாக்குமூலம் தாக்கல் செய்வதற்கு முன்பு நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சியம் அளிக்க சம்மன்

வந்ததா என்றால் வந்தது. தற்போது சாட்சி பிரதிவாதி அழைத்துவந்ததாக கூறுகிறார். என்னை சாட்சியம் அளிக்க அழைப்பதற்கு முன்பு பிரதிவாதி நான் எந்த ஊரில் இருக்கிறேன் என்றால் விசாரித்து பார்த்துதான் அழைத்துவந்தார் என்றால் என்னை முன்பே தெரியும் அவ்வாறுதான் அழைத்தார். இதற்கு முன்பு என்னுடைய வீட்டிற்கு வந்துள்ளாரா என்றால் வந்துள்ளார் எதற்காக வந்துள்ளார் என்றால் தேங்காய் மரம் வெட்டச்செல்வேன் அதற்காக வருவார். தென்னை மரம் எந்த ஊரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் என்னுடைய பத்திரம் எழுதத்தான் சார்பதிவாளர் அலுவலகம் வந்தேன் என்றால் அங்கு பிரதிவாதி மோசடியாக கிரய ஆவணத்தை எழுதிவைத்தார் என்றும் அதில் சாட்சி கையொப்பமிட்டுவிட்டு தற்போது பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் விசாரணையில் எனக்கு தெரியாத சங்கதிகளை கூறியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.